**நாகொட பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 28 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 நவம்பர் 14 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து, நாகொடை பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஒய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 2,360,670 இற்காக பங்களிப்பு தொகையினை கணக்கீடு செய்திருக்காமையால் ஆண்டிற்கான செலவுகள் மற்றும் நடைமுறை பொறுப்புக்கள் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையில் காணப்பட்ட சேதனப் பசளை இருப்பின் பெறுமதியினை கணித்து கணக்கீடு செய்திருக்காமையால் நடைமுறை சொத்துக்கள் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை 35,988,097 தொகைக்கான 10 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் மற்றும் அதனொடு தொடர்புடைய துனை பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே அவதானிக்கப்பட்ட சமமிமைகளின் கூட்டுத் தொகை ரூபா 9,533,109 தொகையாக இருந்தது.

#### 1.3.3 தொங்கள் கணக்கு

2008 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வந்து காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 18,314 தொகைக்கான தொங்கல் கணக்குகளின் செலவு மீதியை இனங்கண்டு உரிய சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு கணக்குகளைத் தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை

**1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 23,374,779 தொகையான 07 பெற வேண்டிய கணக்குகள் மீதிகளின் பெறுமதியினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) நீண்ட காலம் முதல் முன் கொண்டு வரப்பட்டு காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 16,070,719 தொகையான நிலுவை வருமானம் கணக்கின் மீதியினை இனங்கண்டு அப் பணத்தை அறவீடு செய்து உரிய சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு கணக்குகளை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2011 ஆண்டு முதல் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 1,084,926 இற்கான செலுத்த வேண்டிய முத்திரை வரி மற்றும் 2012 ஆண்டு முதல் காணப்படும் ரூபா 1,968,246 இற்கான பெறுமதி கூடிய வரி வைப்புகள், உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பப்படாமல் சபையின் பொது வைப்புக் கணக்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 10 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 3,308,578 தொகைக்கான கடன்கொடுத்தோர் மீதியொன்று காணப்பட்டது.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

கூட்டத்தொகை ரூபா 85,338,093 இற்கான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நாளதுவரை ஆக்கப்பட்ட சொததுக்கள் வகுப்பு அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் அட்டவணையும் ,ரூபா 9,898,199 தொகைக்கான திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புகள் தொடர்பாக முறைசார் விதமாக ஆக்கப்பட்ட வைப்புகள் பதிவேடு சமர்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவதத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை குடியரசு நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 396(ஈ) | வழங்கியிருந்த ஆனால் கொடுப்பன விற்காக சமர்பிக்கப்படாத 06 மாத காலத்தை மிகைத்திருந்த ரூபா 72,005 தொகை பெறுமதியான 33 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணங்கள் 1645 மற்றும் 1646 | மீளாய்வாண்டின் போது சபையின் 10 வாகனங்களுக்கான நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்பு கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்கு சமர்பிக்கபட்டிருந்த நிதிக் கூற்றுகளின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,944,750 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,444,034 தொகையாக காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 2,500,716 இற்கான வளர்ச்சி ஒன்றினைக் காட்டியது.

(ஆ) மீளாய்வாண்டின போது முலதன வருமானத்தை மிகைத்து ரூபா 1,473,262 இற்கான மூலதனச் செலவுகள் மேற்கொள்ளபட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 ஏக்கர் வரி

நிலுவை ஏக்கர் வரி அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 158 (1) (அ) வின் பிரகாரம் செயற்படாமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 230,434 இற்கான நிலுவை வரி மீதியொன்று காணப்பட்டது.

#### 2.2.2 வாடகை மற்றும் வீட்டு வாடகை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159 (1) இன் பிரகாரம் செயற்படாமையால் வருட இறுதி அளவில் மேலும் ரூபா 287,850 இனால் நிலுவை அதிகரித்திருந்தது.

#### 2.2.3 சந்தை வாடகை

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,586,700 தொகை ஆகிய நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு, அமுல் நடத்தியிருக்கவில்லை.

#### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 7,345,150 இற்கான முத்திரைக் கட்டணம் மற்றும் ரூபா 1,840,928 இற்கான நீதிமன்றத் தண்டப் பணம் என்பன கிடைக்க வேண்டியிருந்தன.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

2016 பாதீட்டின் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 17,471 ஹெக்டயர் காணி காணப்பட்ட போதிலும், பாதிடப்பட்ட ஏக்கர் வரி வருமானம் ரூபா 115,000 தொகையாக இருந்தது. அதன் பிரகாரம் சபையின் அதிகார பிரதேசத்தில் காணப்படும் காணிகளின் அளவினை கவனத்தில் எடுக்காமல் ஏக்கர் வரி வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) பதவியணியின் முகாமைத்துவம்

(i) 2006 ஏப்ரல் 10 திகதிய 28 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கைக்கு இணங்காமல் சபையினால் அமைய, தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் பதவிகலத்தின் 10 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு 2016 ஆண்டின் போது சம்பளம் மற்றும் படிகள் ஆக ரூபா 1,611,900 இற்கான தொகையொன்று செலுத்தியிருந்தது.

(ii) முன்பள்ளி பொறுப்பாளர் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 03 ஆக இருந்த போதிலும், 09 பேர்கள் சேர்க்கப்பட்டு நிரந்தரப்படுத்தப்பட்டிருந்தது. அது தவிர மேலும் 06 பேர் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தமையால் முன்பள்ளி பொறுப்பாளர் 12 பேர் மிகையாக காணப்பட்டனர் என அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபைக்கு சொந்தமான கடைகளை வாடகைக்கு கொடுத்தல்

(i) மாபலகம பழைய கடைகள்

- மாபலகம வீதிச் சந்தியில் அமைந்துள்ள 04 பழைய கடைகளை வாடகைக்குக் கொடுப்பதற்கு வாடகை உடன்படிக்கை கையொப்பமிடாமல் 1971 ஆண்டு முதல் வாடகைக்குக் கொடுத்திருந்ததென அவதானிக்கப்பட்டது.
- மாபலகம பழைய கடை இலக்கம் 01 வெறிதாகக் காணப்பட்டமையால் சபைக்கு வருமானம் ஏதும் உழைக்க முடியாதிருந்தது.

(ii) தல்கஸ்வெல கடைகள்

- தல்கஸ்வெலவில 05 கடைகள் காணப்படுவதுடன், அதற்காக செல்லுபடியாகும் வாடகை உடன்படிக்கைகள் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.
- உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 ஆம் திகதி தபபா/பபாகோ/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு முரணாக கடை இலக்கம் 02 மற்றும் 05 வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது.

(iii) மாபலகம வர்த்தகக் கட்டிடத் தொகுதி

- மாபலகம வர்த்தக கட்டிடத் தொகுதியில் 06 ஆம் இலக்க கடை, 2012 ஆண்டு மார்ச் மாதம் முதல் வாடகைக்கு கொடுத்திருக்காமையால் உழைக்கக் கூடியதாக இருந்த கடை வாடகை வருமானத்தை சபை இழந்துள்ளது.
- மேல்மாடியில் 02 ஆம் இலக்கம் தரை மாடியில் 05 ஆம் இலக்க கடைகளுக்காக செல்லுபடியாகும் உடன்படிக்கைகள் காணப்படவில்லை.

## 3.3 செயற்பாட்டு திறமையின்மை

**செயற்திட்டங்கள் தாமதப்படுத்தல்**

மீளாய்வாண்டின் போது பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் ரூபா 3,700,000 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்ட 10 நிர்மாண வேலைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் ரூபா 1,250,000 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்ட 02 நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்படாமல், கைவிடப்பட்டிருந்தது.

## 3.4 விளைவற்ற / குறைவாக பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

சபைக்கு சொந்தமாக காணப்பட்ட பெகோ லோடர் இயந்திரமொன்று, பவுஸர் ஒன்று, குப்பை டிலேரர் மற்றும் 02 டிலேரர்கள் பயன்படுத்தப்படாமல் இருப்பதால் 2015 ஜுலை 10 திகதி 2/2015 பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அதனை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.5 திண்மக் கழிவு பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் சேகரிக்கப்படும் உக்காத குப்பைகள் மற்றும் உக்கப்படும் குப்பைகள் கழிவு பொருட்கள் மீள்சுழற்சி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்காமல் அப்தொப்வத்த என்ற காணியில் காணப்படும் கிடங்குகளில் போடப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் சேகரிக்கப்படும் உக்காத குப்பைகளை, செயற்தளத்திற்கு வெளியே ஒரு இடத்தில் குவிக்கப்பட்டு காணப்பட்டதுடன், அந்த கழிவு பொருட்களை வகைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதேபோல் பிளாஸ்டிக் பாத்திரங்களில் மற்றும் டயர்களில் நீர் தேங்கியிருந்ததுடன், அந்த கழிவு பொருட்களை முறைப்படி அகற்றுவதற்கு சபையினால் திட்டங்கள் தயாரித்திருக்காமையினால் பல்வேறு நோய்கள் பரவுதல் மற்றும் சமூகம் சார் சிக்கல்கள் ஏற்படும் ஆபத்து ஒன்று காணப்பட்டது.

# 4 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளிடையே கணிசமான அளவு முரண்கள் அவதானிக்கப்படாமையானது, பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 தீர்க்கப்படாத மற்றும் பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் 2.2.1 பந்தியில் (ஆ),(இ) மற்றும் 2.2.3 ஆகிய பந்திகள் சுட்டிக் காட்டியிருந்த குறைபாடுகளை சரி செய்வதற்கு இணங்கியிருந்த போதும், மீளாய்வாண்டின் போது குறிப்பிட்ட சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.3 உள்ளக கணக்காய்வு**

மீளாய்வாண்டின் போது சபையினால் உள்ளக கணக்காய்விற்காக 3 உத்தியோகத்தர்கள் இடையிடையே நியமனஞ் செய்திருந்ததுடன், உள்ளக கணக்காய்வு தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணங்கள் 133 மற்றும் 134 இன் ஏற்பாடுகள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் (தென்மாகாணம்) இன் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதிய தபபா/யஹ/01/நா.ச.லே. இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுச் செயற்படுத்துதல்**

2009 ஜுன் 09 ஆந் திகதி DMA/2009 (i) இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்காக மீளாய்வாண்டு இறுதிவரை சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. கீழே விவரிக்கப்பட்டுள்ள முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

| முறைமைகள் | முறைமையில் முக்கிய குறைபாடுகள் |
|---|---|
| (அ) வாகனக் கட்டுப்பாடு | (i) செயற்படாத வாகனங்களை திருத்து வதற்காக அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (ii) 10 வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |
| | (iii) சில வாகனங்களுக்காக வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) பதிவேடுகள் பேணுதல் | (i) நாளது வரை பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, கணினிகள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஆகிய பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) | திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புப் பதிவேடு நாளதுவரை பேணப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | வருமானம் சேகரித்தல் | (i) | அபிவிருத்தி அடைந்துள்ள பிரதேசங்களில் அறவிடக் கூடிய ஆதனங்களை இனங்கண்டு வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | | (ii) | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்காக முறையான வேலைத் திட்டமொன்று செயற்படுத்தியிருக்கவில்லை. |
| | | (iii) | முத்திரைக் கட்டணம், நீதிமன்றத் தண்டப்பண வருமானம் இற்றை வரை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | | (iv) | கடை வாடகை உடன்படிக்கைகள் நாளது வரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | | (v) | புதிய வருமானம் உழைக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. |
| (ஈ) | பணியாளர் குழு முகாமைத்துவம் | (i) | பதவியணி வெற்றிடங்கள் நிரப்புவதற்காக அதே போல் மிகை பதவியணியினை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | | (ii) | சபையில் கடமையாற்றிய உத்தியோகத்தர் களின் கடன் மீதியை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | | (iii) | சிரேஷ்ட உத்தியோகத்தர்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய கருமங்களுக்காக வெளிக்கள தொழிலாளரை சேவையில் ஈடுபடுத்தியிருந்தனர். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கணக்கீடு | (i) | முன்னைய ஆண்டுகள் முதல் மாற்றமின்றி முன்கொண்டு வரப்படும் கணக்கு மீதிகள் தொடர்பாக கவனம் தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு கணக்குகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | | (ii) | நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே காணப்படும் வித்தியாசங்களை இனங்கண்டு அவற்றை சரிசெய்தல் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. |
| | | (iii) | வழங்கப்பட்டிருந்த ஆனால் கொடுப்பனவு க்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த 33 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | | (iv) | இரண்டு வருட காலத்தை மிகைத்திருந்த வைப்பு நிதிகளை இனங்கண்டு அவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஊ) | திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் | | 05 வருமான விடயங்களில் 8 சதவீதம் முதல் 24 இடைப்பட்ட வீச்சில் பிரதிகூலமான முரண்கள் காணப்பட்டது. |